# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109430

1. District மாவட்டம் : ஈரோடு
   PS: காவல்நிலையம் VE, AC ஈரோடு
   Year: ஆண்டு 2023
   FIR No. மு.த.அ. எண் 03/AC/2023
   Date: நாள் 22.2.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 16.2.2023 — Date to நாள் வரை : 21.2.2023
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல் : 2.00 PM — Time to நேரம் வரை : 4.30 PM
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.2.2023 — Time நேரம் : 8.00 Am
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD 01/05 22.2.2023 — Time நேரம் : 9.00 Am

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 4.கி.மீ தென்மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் —
   (b) Address : முகவரி சார்பதிவாளர் (பதிவு மற்றும் சார்பு) அலுவலகம் மாவட்ட பதிவாளர் அலுவலகம், ஈரோடு.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. சுரேஷ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைசாமி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 20.7.1973
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் சுயதொழில்
   (g) Address : முகவரி க.எண் 4/12 பெரியார் தெரு, வெள்ளாங்குளம் வழி, இலைப்பட்டி, ஓலைதாபுரம் (அஞ்சல்) ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. ராஜேஸ்வரி, சார்பதிவாளர் (பதிவு மற்றும் சங்கம்) மாவட்ட பதிவாளர் அலுவலகம், ஈரோடு
   2) திரு. தமிழ் செல்வன், கிளார்க், சார்பதிவாளர் (பதிவு மற்றும் சங்கம்) அலுவலகம், மாவட்டபதிவாளர் அலுவலகம், ஈரோடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: — தாமதமில்லை —
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

— தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது. —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22.2.23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

D. [signature] 22/2/23.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

22.02.2023 - 07.00 மணி

Name: பெயர் M. ஏசு.
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் .........
[illegible]

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 3/AC/2023 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 22.02.2023 தேதி காலை 8.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது D.சுரேஷ், த/பெ துரைசாமி, கதவு எண்.4/12, முதலியார் தெரு, ஒலைப்பட்டி, ஒ.சௌதாபுரம் அஞ்சல், வெண்ணந்தூர் வழி, ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் : D.சுரேஷ், த/பெ துரைசாமி, கதவு எண்.4/12, முதலியார் தெரு, ஒலைப்பட்டி, ஒ.சௌதாபுரம் அஞ்சல், வெண்ணந்தூர் வழி, ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், ஈரோடு. ஐயா, நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் B.E.(EEE) படித்துள்ளேன். நான் V Start up Society and Registration hub என்ற பெயரில் புதிதாக ஆரம்பிக்கும் சங்கத்தை பதிவு செய்வது, பழைய சங்கத்தை புதுப்பித்து கொடுக்கும் பணியை செய்து வருகிறேன். மேலும், தனியார் நிறுவனங்கள் பதிவு செய்தல் பணியையும் செய்து வருகிறேன். அதற்காக நான் சேவை கட்டணமாக ஒரு தொகையை பெற்றுக்கொள்வேன். ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டாரத்தில் இருந்து மகளிர் சுய உதவிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளராக செயல்படும் பெருந்துறையை சேர்ந்த திருமதி.நிர்மலா என்பவர் எனக்கு எனது அம்மா வகையில் பழக்கமானவர். அவர் கடந்த ஜனவரி மாதத்தில் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு அவர்கள் பகுதியில் உள்ள ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்புகள் மொத்தம் 27 ஏற்கனவே சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்), ஈரோட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பை புதுப்பித்து தர கேட்டுக்கொண்டார். நானும் சரி என்று சொன்னேன். நானும் ஓரிரு தினங்களில் திருமதி.நிர்மலா அவர்களை பெருந்துறை சென்று நேரில் சந்தித்தேன். அப்போது அவர் 27 கூட்டமைப்பின் பதிவு ஆவணங்களையும், தணிக்கை அறிக்கை, உறுப்பினர்களின் ஆதார் நகல்களையும், கூட்டமைப்புகளின் பயனர் பதிவு எண் மற்றும் கடவுச்சொல்லை என்னிடம் கொடுத்தார். மேலும், அவர் சில கூட்டமைப்பில் புதிதாக உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்றும், செயற்குழு உறுப்பினர்களை மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நான் அதை பெற்றுக்கொண்டு, அதற்கான ஆண்டு அறிக்கை கோர்வையை புதுப்பித்தல் செய்வதற்கான பணியினை ஆன்லைன் வாயிலாக செய்யத்

தொடங்கினேன். அவ்வாறு பதிவு செய்யும்போது வரவு, செலவு தொகைகள் பற்றி குறிப்பிடவேண்டும், அதற்காக ஒவ்வொரு கூட்டமைப்பிலும் வரவு செலவு தொகைகளை குறிப்பிடும்போது அதற்காக பதிவுத்துறைக்கு ஆன்லைனில் செலுத்த வேண்டிய தொகைகள் விபரம் தெரியவந்தது. அதை ஒவ்வொரு கூட்டமைப்பும் கட்ட வேண்டிய தொகையை குறித்து கொண்டேன். பின்னர், அதை பிரின்ட் எடுத்தேன். பின்னர், அதை எடுத்துக்கொண்டு மீண்டும் பெருந்துறை சென்று திருமதி.நிர்மலா அவர்களிடம் கொடுத்தேன். மேலும், அதற்காக ஒவ்வொரு மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பிற்காகவும் ஆன்லைனில் கட்டணம் செலுத்த வேண்டிய விபரத்தை சொன்னேன். பின்னர், மேற்படி 2 கூட்டமைப்பிற்கு பதிவுத்துறைக்கு கட்ட வேண்டிய தொகையை அவர்களிடமிருந்து பெற்று ஆன்லைன் மூலம் கட்டினேன். ஒரு சில சமயங்களில் அரசு க்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை நானே செலுத்திவிட்டு, பின்னர், கூட்டமைப்பில் இருந்து பெற்றுக்கொள்வேன். பின்னர், இது சம்மந்தமாக 15.2.2023-ம் தேதி ஈரோடு, ரங்கம்பாளையத்தில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று விசாரித்து அந்த அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) அலுவலகத்திற்கு சென்று கிளர்க் திரு.தமிழ்செல்வன் அவர்களை பார்த்து விசயத்தை சொன்னேன். பின்னர், மேற்படி 4 கூட்டமைப்பு சம்மந்தமான ஆவணங்களை கொடுத்தேன். அவற்றை அவர் வாங்கி பார்த்துவிட்டு, கூட்டமைப்பின் அனைத்து ஆவணங்களையும் இன்ஸ்பெக்சன் பார்த்த பிறகே புதுப்பிக்க முடியும் என்று சொல்லி, அதற்கான ஒரு படிவத்தை கொடுத்து அதில் உள்ள ஆவணங்கள் அனைத்தையும் எடுத்து வரச்சொன்னார். நான் அந்த படிவத்தை பெற்றுக்கொண்டேன். மேற்படி, விபரத்தை திருமதி.நிர்மலா அவர்களிடம் சொன்னேன். அவர் 16.2.2023-ம் தேதி கூட்டமைப்பின் வட்டார ஒருங்கிணைப்பாளர் திருமதி.நித்யா அவர்களிடம் மேற்படி 4 கூட்டமைப்புகளின் ஆவணங்களை கொடுத்தனுப்பினார். அவரோடு ஈரோடு மாவட்டம், திருவாச்சி ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பின் கணக்காளர் திருமதி.சங்கீதா அவர்களும் உடன் ஈரோடு வந்தார். அவர்களை நான் அழைத்துக் கொண்டு ஈரோடு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு சென்று அன்றைய தினம் 16.2.2023-ம் தேதி பகல் சுமார் 02.00 மணிக்கு சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) திருமதி.ராஜேஸ்வரி அவர்களை சந்தித்து மேற்படி 4 கூட்டமைப்புகளின் ஆவணங்களை கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு ஒவ்வொரு கூட்டமைப்பிற்கு ரூ.9,000/-வீதம், 4 கூட்டமைப்பிற்கு சேர்த்து ரூ.36,000/- தனக்கு தனியாக தர வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் ஒருங்கிணைப்பாளரிடம் கேட்டு சொல்வதாக சொன்னேன். பின்னர், ஏற்கனவே நான் சந்தித்த அந்த அலுவலகத்தில்

இருந்த கிளர்க் திரு.தமிழ்செல்வன் அவர்கள் என்னை மட்டும் தனியாக அழைத்து தனக்கு தனியாக ஒரு கூட்டமைப்பிற்கு ரூ.1,500/-வீதம் 4 கூட்டமைப்பிற்கு ரூ.6,000/- கொடுத்தால் தான் எனது வேலையை முடித்து தருவேன் என்று சொன்னார். இந்த தகவலை நான் திருமதி.நிர்மலா அவர்களிடம் சொன்னபோது, அவர் தொகை அதிகமாக உள்ளது, நீங்களே பார்த்து முடித்து தாருங்கள் என்று சொன்னார். எனவே, நான் சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் நீங்கள் கேட்ட தொகை அதிகமாக உள்ளது கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.1,000/- வீதம் குறைத்து கொள்வதாக சொல்லி, ஒரு கூட்டமைப்பிற்கு ரூ.8,000/- வீதம் 4 கூட்டமைப்பிற்கு சேர்த்து ரூ.32,000/-ஐ அடுத்த நாள் 17.2.2023-ம் தேதி காலையில் வந்து கொடுங்கள் அப்போது தான் 4 கூட்டமைப்பையும் புதுப்பிக்க முடியும் என்று சொல்லிவிட்டார். அப்போது நான் திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் செல்போன் நம்பரை கேட்டு வாங்கி கொண்டேன். நானும் வேறு வழி தெரியாமல் சரி என்று சொல்லிவிட்டு, திருமதி.நித்யா மற்றும் திருமதி.சங்கீதா ஆகியோர்களை அழைத்து கொண்டு அந்த அலுவலகத்தில் இருந்து கிளம்பினேன். நானும் சரி என்று வந்து விட்டேன். ஆனால், என்னால் 17.2.2023-ம் தேதி உடல் நிலை சரியில்லாததால் அந்த அலுவலகத்திற்கு செல்லமுடியவில்லை. பின்னர், 20.02.2023-ம் தேதி காலை சுமார் 10.15 மணிக்கு நான் எனது செல்போன் நெம்பர்.9790288746-லிருந்து திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் செல்போன் எண்.9566584434-ற்கு கூப்பிட்டு விசயத்தை சொல்லி இன்று வரலாமா என்று கேட்டேன். அவர் அன்றையதினம் மதியம் சுமார் 2 மணிக்கு மேல் வர சொன்னார். ஆனால், என்னால் வேறு வேலை இருந்ததால் அன்றையதினமும் செல்லமுடியவில்லை. அதன்பின் நேற்று 21.2.2023-ம் தேதி ஈரோடு, மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.30 மணிக்கு சென்று சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களை நேரில் சந்தித்தபோது, வேறு ஒரு கூட்டமைப்பை ஆய்வு செய்து கொண்டிருந்தார். அவர் என்னை பார்த்ததும் எழுந்து வந்து என்னை தனியாக அழைத்து சென்று தான் ஏற்கனவே கேட்டிருந்த தொகை ரூ.32,000/- பணத்துடன் நாளை 22.2.2023-ம் தேதி மதியம் 12.00 மணிக்கு தன்னை பார்க்கும்படி சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு கிளம்பினேன். அப்போது திரு.தமிழ்செல்வன் கிளர்க் என்னை அழைத்து தான் ஏற்கனவே கேட்ட ரூ.6,000/-த்தை நாளைக்கு கொடுத்துவிட வேண்டும் என்று கண்டிப்பாக சொன்னார். மேலும், அவர் அவரது செல்போன் நெம்பரை என்னிடம் கொடுத்து நாளை வருவதற்கு முன்பு போனில் பேசிவிட்டு வரும்படி சொன்னார். பின்னர், நான் கிளம்பி வந்து விட்டேன். மேலும், 2 கூட்டமைப்புகளுக்கு அரசுக்கு கட்ட வேண்டிய கட்டணத்தை ஆன்லைன் மூலம் 21.2.2023-ம் தேதி கட்டிவிட்டேன். பின்னர், நான் யோசித்து பார்த்தேன். மேற்படி 4

கூட்டமைப்பை புதுப்பிக்க அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதும் செலுத்திய பிறகு சார்பதிவாளர் திரு.ராஜேஸ்வரிக்கும், கிளர்க் திரு.தமிழ்செல்வன் அவர்களுக்கும் லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, மேற்படி 4 கூட்டமைப்புகளை புதுப்பித்தல் மற்றும் உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் செயற்குழு மாற்றம் செய்வதற்காக லஞ்சமாக பணம் கேட்கும் சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) திருமதி.ராஜேஸ்வரி, அந்த அலுவலக கிளர்க் திரு.தமிழ்செல்வன் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேற்படி அதிகாரிகள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.38,000/- கொண்டு வந்திருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (D.சுரேஷ்,) 22.2.2023.

Sir, Received the above said computer typed complaint on 22.02.2023 at 08.00 hrs. Sd/- (xxxxxxxx) 22.2.2023 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.03/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 09.00 hrs today on 22.2.2023. Sd/- (xxxxxxxx) 22.2.2023 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.D.Suresh, S/o Duraisamy, D.No.4/12, Mudaliyar Street, Olaipatty, O Sowthapuram (PO), Vennanthur (Via), Rasipuram (TK), Namakkal (Dt) is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

22.2.23

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.